# விம்கோ நகருக்கு ஜனவரியில் மெட்ரோ ரயில் ஓடும்

**சென்னை, டிச. 11–** வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, ஜனவரி இறுதியில், மெட்ரோ ரயில் போக்குவரத்து துவங்க, ஏற்பாடு நடந்து வருகிறது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் மெட்ரோ இடையே, மெட்ரோ ரயில் இயக்கப் பட்டு வருகிறது.

இதன் நீட்டிப்பு திட்டத் தில், வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, 3,770 கோடி ரூபாய் செலவில், 9.1 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இப்பணி, 80 சதவீதம் முடிந்துள்ளது. இதில், தண்டவாளம் அமைக் கும் பணி முடிந்துள்ளது. நிலையங்கள் கட்டுமான பணிகள், இறுதி கட்டத்தை எட்டியுள்ளன.

சிக்னல்கள் மற்றும், மின் மயமாக்கும் பணி நடந்து வருகிறது.

இதையொட்டி, இப் பாதையில் வரும், 20ம் தேதிக்கு பின், டீசல் ரயில் இன்ஜின் சோதனை ஓட்டம் நடத்தப்படுகிறது. இதன் பின், இம்மாத இறுதியில், மெட்ரோ ரயில் இயக்கி, சோதனை நடத்தப்பட உள்ளது.

ஜனவரி இரண்டாவது வாரம், ரயில்வே பாது காப்பு கமிஷனர், அதி வேகமாக மெட்ரோ ரயில் இயக்கி, சோதனை நடத்த உள்ளார்.

இதன் பின், பயணியர் ரயில் இயக்க அனுமதி கிடைத்ததும், ஜனவரி இறுதிக்குள், வண்ணாரப் பேட்டை–திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, மெட்ரோ ரயில் போக்கு வரத்து துவங்க, மெட்ரோ நிறுவனம் திட்டமிட்டு உள்ளது.